விலை ரூபா 5-00

# வலம்புரி
VALAMPURI

சுடர்: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆனி 18 ஞாயிற்றுக்கிழமை (02-07-2000) VALAMPURI ஒளி: 195

★ இராணுவமும்; விடுதலைப்புலிகளும்

# மணலாறு பகுதியில் உக்கிரமோதல்

# ஒரு அதிகாரி உட்பட 9 இராணுவம் பலி

## 43 இராணுவத்தினர் காயம்

(கொழும்பு)

மணலாறுப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றின் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட ஊர்வுத் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட ஒன்பது இராணுவத்தினர் பலியானார்கள். 43 இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

இராணுவத்தினரின் இத்தாக்குதலை தாம் முறியடித்துவிட்டதாகவும், இத்தாக்குதலில் 15 விடுதலைப்புலிகளும், ஒரு எல்லைப்படை வீரரும் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

இந்த இராணுவ நகர்வுச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் போது காயமடைந்த 43 இராணுவத்தினரில் 19பேர் கடுங் காயங்களுக்கும் 24பேர் சிறு காயங்களுக்குள்ளானார்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

மணலாற்றுப் பகுதியில் உள்ள விடுதலைப்புலிகளின் முன்னணிக் காவல் அரண்களை ஊடறுத்து ஒரு கிலோமீற்றர் தூரம் வரை முன்னேறிய இராணுவத்தினரை தாம் முறியடித்து விட்டதாகவும் இதனையடுத்து இராணுவத்தினர் தம் நிலைக்குத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்று சமரில் உயிரிழந்த புலிகள் விபரம்

(வவுனியா)

மணலாற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலின் போது தமது தரப்பில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரங்களை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர் அவர்களின் விபரம் வருமாறு:

★ தமிழ்செல்வி (செல்லத்தம்பி சௌன்சவதி) மட்டக்களப்பு

★ தர்ஷினி (பிள்ளையான் சகுந்தலா) மட்டக்களப்பு

★ பரிமளா (செலவராஜா இந்துமலர்) மட்டக்களப்பு

★ காவிகா (குமாரசாமி தேவகி) மட்டக்களப்பு

★ நதலேஸ் (இளையதம்பி தர்ஷினி) மட்டக்களப்பு

★ தேனிசை/இலக்கி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப்பகிர்வுத்திட்டத்தை புலிகள் நிராகரித்தாலும் அரசு முன்னெடுக்கும்

(கொழும்பு)

உத்தேச அரசியல் சீர்திருத்த சட்டத்தில் இடம்பெறவுள்ள அதிகாரப் பகிர்வு யோசனைகளை புலிகள் நிராகரித்தாலும் அரசாங்கம் தொடர்ந்து தனது நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் பட்டி வீரகோன் தெரிவித்துள்ளார்.

தமிழ் கார்டியன் பத்திரிகைக்கு அன்ரன் பாலசிங்கம் அளித்த பேட்டி தொடர்பாக கருத்துத்தெரிவிக்கையிலேயே அமைச்சர் பட்டிவீரகோன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அரசின் தீர்வு யோசனை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு 4ம் திகதி கூடும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் 4ம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

அலரிமாளிகையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழ் கார்டியனுக்கு அளித்த பேட்டி உத்தேச அரசியலமைப்பு, எதிர்வரும் பொதுத்தேர்தல் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அரசு-ஐ.தே.க. பேச்சில் இணக்கமில்லை 7ஆம் திகதி இறுதிக்கட்டப் பேச்சு

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக நேற்று முன்தினம் கூடிய அரசும், ஐக்கிய தேசியக்கட்சியும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அமைப்பது தொடர்பான விடயத்தில் இணக்கம் காணப்பட்டுள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளின் தோல்விக்கு மத்தியஸ்தம் இன்மையே காரணம்

(புதுடில்லி)

கடந்த 90, 94 ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகள் அமைப்பினருக்குமிடையில் இடம்பெற்ற சமாதான முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தமைக்கு மூன்றாம் தரப்பு ஒன்று மத்தியஸ்தர

(6 ஆம் பக்கம் பார்க்க)

★ தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த

## மக்களின் நிவாரணத்தை அந்தந்த பகுதிகூட்டுறவுசங்கங்களே வழங்கும்

தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கான உலர் உணவு நிவாரணங்களை அந்தந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே மேற்கொள்ள வேண்டுமென யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ் குடாநாட்டின் தற்போதைய உணவு நிலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத்தைக் கடத்த முயன்றவர் விடுதலை

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விமானத்தைக் கடத்த முயன்ற தமிழ் இளைஞன் விஜயசிங்கம் லவனை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பயணச் சீட்டு வழங்கல் நாளை பயணிகள் கப்பல் புறப்படும்

(யாழ்ப்பாணம்)

திருமலையிலிருந்து 350 பயணிகளுடன் இன்று பருத்தித்துறை வந்தடையவுள்ள "சிற்றி ஒவ் றிங்கோ" பயணிகள் கப்பல் நாளை திங்கட்கிழமை பயணிகளுடன் திருமலை புறப்படவுள்ளது.

இக்கப்பலில் செல்வதற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்றப்படாத ஆசிரியர்கள் மறியல் போராட்டத்திற்கு முஸ்தீபு

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அனுமதி கிடைக்காத பயிற்றப்படாத ஆசிரியர்கள் நாளைமுதல் பலாலி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலைகள் முன் மறியற் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

தொலைக்கல்வியில் விண்ணப்பம் கொடுத்தமைக்காக தமக்கு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அனுமதி மறுக்கப்பட்டமை நியாயமற்ற செயல் எனவும் இது விடயத்தில் தமக்கு நீதியான தீர்வு கிடைக்கும்வரை இம் மறியற்போராட்டம் தொடருமெனவும் யாழ். மாவட்ட பயிற்றப்படாத ஆசிரியர் சங்கம் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இதேவேளை இச்சங்கம் நேற்றுக்கூடி இனிமேல் தாம் தொலைக்கல்விப் பயிற்சி வகுப்பை பகிஷ்கரிப்பதெனவும் தீர்மானித்ததாகத் தெரியவருகிறது. (ந)

★ இலங்கைப் பிரச்சினைக்கு

## முதல்வர் கூறிய 'செக்'; முறையிலான தீர்வே சரியான வழியாகும்

(சென்னை)

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு தமிழக முதல்வர் தெரிவித்த செக்கோசிலவாக்கிய மாதிரியான யோசனைதான் சரியானவழி என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் செய்தியாளர் மத்தியில் பேசும்போது கூறியுள்ளார்.

அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்திருப்பதாவது

(6 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler, Cullbirds, Cockerels

இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீதியோ ஜெனரர் வளவு) முத்திரைச் சந்தையடி நல்லூர். (1314)

### விற்பனைக்கு

2 KW, 4 KVA, LISTER டீசல் ஜெனரேற்றரும், 13 K.V.A 3 PASS டைனமோவும் விற்பனைக்குண்டு. மூர்த்தி சிவன் வீதி, பறவைக்குளம், திருநெல்வேலி [1441]

### O/L கணிதம் 2000

ஆண்டு 6லிருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுமளவிற்கு கற்பிக்கப்படும். நேரடியாகவோ கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளவும். உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன் C/o T. செல்வராசா ஹரிஸ் களஞ்சியம் 4ம் கட்டை ஆனைக்கோட்டை, மானிப்பாய். (1372

### தவறிவிட்டது

சரவணை கிழக்கு, வேலணையைச் சேர்ந்த சின்னையா ஞானம் என்பவரின் கடற்படையினரின் அடையாள அட்டை அல்லைப்பிட்டிக்கும் வங்களாவடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வேலணை வங்களாவடியில் உள்ள சிபலசரக்குக் கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் சு. சசிகரன் வங்களாவடி வேலணை.

(இ-610)

டச்சு வீதி, சாவகச்சேரி வடக்கு, பொன்னம்பலம் விநாசித்தம்பியின் விசேட அடையாள அட்டை இல. 091020181 கொக்குவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வலம்புரிக் காரியாலயத்தில் அல்லது கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தற்காலிக முகவரி, பி.விநாசித்தம்பி 320, பலாலி வீதி, ஆலடிச் சந்தி கந்தர்மடம்.

(1440)

### புதிய மினிபஸ் சேவை

(செம்பியன்பற்று)

வடமராட்சியைச் சேர்ந்த கோப்பாய், பலாலி ஆகிய ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவர்களின் நலன் கருதி தனியார் போக்குவரத்து மினிபஸ் சேவை ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காலை 7.30 மணிக்கு பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்டு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையூடாக பலாலி ஆசிரியர் கலாசாலையைச் சென்றடைந்து மீண்டும் பி.ப.1 மணிக்கு பலாலி ஆசிரியர் கலாசாலையில் இருந்து சேவை ஆரம்பமாகும்.

(உ-42)

### அபிஷேக அன்னதானம்

(செம்பியன்பற்று)

பலாலி ஆசிரியர் கலாசாலை ஆரம்பிக்கப்பட்ட தினத்தையொட்டி வரும் 7ஆம் திகதி பலாலி ஆசிரியர் கலாசாலை இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் சட்டநாதர் திவ்விய மண்டபத்தில் அபிஷேகமும் அன்னதானமும் இடம் பெறவுள்ளது.

(உ-42)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு ஜூன் மாதம் 24 ஆம் திகதிவரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

**சங்கானை**

| | |
|---|---|
| 131623 ஏ | 141342 ஏ |
| 141342 பி | 141342 சி |
| 141343 ஏ | 141816 ஏ |
| 141816 பி | 141817 ஏ |
| 147168 ஏ | 147329 ஏ |

**சாவகச்சேரி**

141030 ஏ

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| 141031 ஏ | 141103 ஏ |
| 126832 ஏ | 126832 பி |
| 126832 சி | 126832 டி |
| 143159 ஏ | 143159 பி |
| 143159 சி | 143159 டி |
| 144250 ஏ | 144302 ஏ |
| 144308 ஏ | 144308 பி |
| 144308 சி | 144308 டி |
| 144309 ஏ | 144332 ஏ |
| 144332 பி | 144332 சி |
| 144378 ஏ | 144382 ஏ |
| 144383 ஏ | 144406 ஏ |
| 144500 ஏ | 144531 ஏ |
| 144551 ஏ | 144807 ஏ |
| 144807 பி | 144807 சி |
| 147142 ஏ | 147799 ஏ |
| 147799 பி | |
| 147799 சி | 147806 ஏ |
| 147807 ஏ | 147823 ஏ |
| 147898 ஏ | 147898 பி |
| 147898 சி | 147919 ஏ |
| 147919 பி | 147943 ஏ |
| 147943 பி | 147956 ஏ |
| 147956 பி | 147975 ஏ |
| 147975 பி | 147975 சி |
| 147975 டி | 147975 ஈ |
| 147979 ஏ | 147979 பி |
| 147979 சி | 147979 டி |
| 147997 ஏ | 147997 பி |
| 148012 ஏ | 148012 பி |
| 148012 சி | 148012 டி |
| 148061 ஏ | 148061 பி |
| 148073 ஏ | 148073 பி |
| 148073 சி | 148088 ஏ |
| 148088 பி | 149088 சி |
| 148103 ஏ | 148130 ஏ |
| 148132 ஏ | 148132 பி |
| 148132 சி | 148153 ஏ |
| 148153 பி | 148154 ஏ |
| 148154 பி | 148173 ஏ |
| 148173 பி | 148173 சி |
| 148173 டி | 148173 ஈ |
| 148188 ஏ | 148188 பி |
| 148188 சி | 148207 ஏ |
| 148207 பி | 148207 சி |
| 148207 டி | 148209 ஏ |
| 148209 பி | 148215 ஏ |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 143399 ஏ | 143476 ஏ |
| 143476 பி | 149110 ஏ |
| 149111 ஏ | 149114 ஏ |
| 149146 ஏ | 149146 பி |
| 149221 ஏ | 149221 பி |
| 149221 சி | |

**நல்லூர்**

| | |
|---|---|
| 136828 ஏ | 136832 ஏ |
| 136874 ஏ | 136874 பி |
| 136874 சி | 141023 ஏ |
| 141055 ஏ | 141057 ஏ |
| 141079 ஏ | 141079 பி |
| 141080 ஏ | 141110 ஏ |
| 141143 ஏ | 141151 ஏ |
| 147968 ஏ | 138737 ஏ |
| 138737 பி | 144362 ஏ |
| 148018 ஏ | 148029 ஏ |
| 148029 பி | 148020 சி |
| 148148 ஏ | 148148 பி |
| 148148 சி | 148148 டி |
| 149173 ஏ | 149173 பி |
| 147208 ஏ | 147208 பி |
| 147340 ஏ | 147341 ஏ |
| 147341 பி | 147341 சி |
| 147341 டி | 147364 ஏ |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 135496 ஏ | 138081 ஏ |
| 138081 பி | 138081 சி |
| 138168 ஏ | 138168 பி |
| 142034 ஏ | 146969 ஏ |
| 146969 பி | 147226 ஏ |
| 147226 பி | 147227 ஏ |
| 147227 பி | 147278 ஏ |
| 147278 பி | 147302 ஏ |
| 147302 பி | 147302 சி |
| 147302 டி | 147343 ஏ |
| 147343 பி | 147371 ஏ |
| 148302 ஏ | 148302 பி |
| 148304 ஏ | 148316 ஏ |
| 148316 பி | 148316 சி |
| 148316 டி | 148324 ஏ |
| 148324 பி | |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 147063 ஏ | 147063 பி |
| 147119 ஏ | 147119 பி |
| 147209 ஏ | 147209 பி |
| 147209 சி | 147243 ஏ |
| 148243 பி | 147274 ஏ |
| 147385 ஏ | 147450 ஏ |

**உடுவில்**

| | |
|---|---|
| 134678 ஏ | 134678 பி |
| 141952 ஏ | 141952 பி |
| 146960 ஏ | 146960 பி |
| 146960 சி | 146983 ஏ |
| 146992 ஏ | 146992 பி |
| 147002 ஏ | 147002 பி |
| 147002 சி | 147031 ஏ |
| 147031 பி | 147031 சி |
| 147031 டி | 147048 ஏ |
| 147048 பி | 147146 ஏ |
| 157146 பி | 147172 ஏ |
| 147189 ஏ | 147189 பி |
| 147216 ஏ | 147322 ஏ |
| 147322 பி | 147408 ஏ |
| 147408 பி | 147408 சி |

(சு)

### மாவிலை குறைப்பு

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை உடனடியாக கிலோவிற்கு 3 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக அரசு நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இதன்படி கோதுமை மாவிற்கான புதிய விலை 15 ரூபா 15 சதமாக நிர்ணயிக்கப்பட்டதாகவும் அரச செய்திகள் மேலும் தெரிவித்தன. (க-உ)

### திருட்டு

(யாழ்ப்பாணம்)

80 கிலோ மிளகாய் தூள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று கோண்டாவில் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

கோண்டாவிலில் இரத்தினம்செல்லையா என்பவருடைய மில்லில் இருந்தே மிளகாய்தூள் திருடப்பட்டதாகவும் இது குறித்து விசாரணைகள் முடுக்கி விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-12)


**நாகம்ஸ்**
சுன்னாகம்

4வது வாரத்தைநோக்கி
கார்த்திக், ரோஜா, அஜித் நடித்த
**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**
(தீல்ஸ்)
11.00, 2.30 [பு.நே]
(இ/462)

**ஸ்ரீசெல்வா**
யாழ்ப்பாணம்

சூப்பர் ஸ்ரார் ரஜனிகாந்
அமீர்கான் நடித்த
**ஆண்டவன்**
[புதிய வெளியீடு CD பிரதி]
10.30, 2.00 (பு.நே)
(இ-499)

**'ராஜா'**
யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
விஜய், மந்தரா
ரகுவரன் ஜயலக்ஷ்மி
நடித்த
**லவ் டுடே**
புதியநேரம்10-30 – 2-00
03-07-2000 முதல்
**அருணாச்சலம்**
[இ/555]

**லஷ்சுமி**
(இணுவில்)
இன்று முதல்
சத்தியராஜ், தேவயானி
வடிவேல், சரளாவின்
**என்னம்மா கண்ணு**
10.30, 2.30 [ப.நே]
(இ/538)


### வாழ்த்துகிறோம்

மேலைத்தேய வாத்தியத் தொகுதியை
உருவாக்கிய
**தெல்லியூர் திரு. வே. பாலேந்திரன்**
அவர்களுக்கு
**ஐயனார் சனசமூக நிலையம்**
பட்டம் வழங்குவதையொட்டி வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்-
சுன்னாகம்.

(இ 614)

யாழ். கோண்டாவில் குமர கோட்டம்

**திருவருள்மிகு ஞானபைரவராலய புனராவர்த்தனப் பிரதிஷ்ட**

## மஹா கும்பாபிஷேகம்

பைரவப் பெருமான் அடியார்களே!

நிகழும் விக்கிரம வருடம் ஆனிமாதம்19 ஆம் திகதி (03-07-2000)திங்கட்கிழமை காலை 9 மணி 07 நிமிடம் முதல் 10 மணி 13 நிமிடம் வரையுள்ள சுப முகூர்த்தத்தில் ஸ்ரீ சாமுண்டாம்பிகா சமேத ஞான பைரவப் பெருமானுக்கும், விநாயகர், சுப்பிரமணியர் ஆகியோம் பரிவார மூர்த்திகளுக்கும் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூட்டிவைத்திருப்பதால் அடியார்கள் அவற்றைத் தரிசித்து திருவருள் பெறுவீர்களாக.

ஆலய பரிபாலன சபையினர்.

(இ-615)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஈராண்டுப் பகுதிநேரப் பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கைநெறி

2000 / 2002

### புதிய அனுமதி

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 2000.7.31-ல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதிக்கிளையில்/பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையில் ரூபா 50/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டினை உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 50/- இற்கான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் முத்திரையொட்டப்பட்ட, சுய முகவரியிடப்பட்ட தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 2000.7.31 ஆகும்.

எழுத்துத் தேர்வு அல்லது நேர்முகத் தேர்வு அல்லது இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து 25 மைல் சுற்றாடலுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கைநெறிக்குப் பதிவுசெய்யும் போது மேற்குறிப்பிட்ட இடமாற்றல் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் 2000.7.31 ஆம் திகதிக்கு முன்னர் உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இக்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
2000-6-27

(இ,613)

# மட்டக்களப்பில் இனந்தெரியாதோரால் இரு ரெலோ உறுப்பினர்கள் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மட்டக்களப்பு கல்லடியில் ரெலோ உறுப்பினர்கள் இருவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 3 45 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆரையம்பதி ரெலோ அலுவலகத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் மணிவண்ணம், விநாயகமூர்த்தி புஸ்பராசா ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் மட்டக்களப்பு நகருக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வரும்போது கல்லடி சிவானந்த வித்தியாலயத்திற்கு அருகில் வைத்து சுடப்பட்டுள்ளனர்.

அந்த இடத்திலேயே இருவரும் உயிரிழந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ★ இடைக்கால நிர்வாகசபைகுறித்து ஜனாதிபதி - தமிழ்க்கட்சிகள் அடுத்தவாரம் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்தவாரம் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சித் தலைவர்களை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சுக்களின் போது அரசுக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையில் அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக இடம்பெற்ற பேச்சில் இணக்கம் ஏற்பட்டவிடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது.

அத்துடன் இவ்விடயங்கள் குறித்து தமிழ்க் கட்சித் தலைவர்களின் அபிப்பிராயங்களையும் ஜனாதிபதி கேட்டறியவுள்ளார்.

இந்தப் பேச்சின் போது இடைக்கால நிர்வாக சபை பற்றியும் ஆராயப்படவுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-வ)

# மிகக் கூடிய நெருக்கடி மத்தியில் மடு கல்வி வலய செயற்பாடு

## பணிப்பாளர் வேதனை வெளிப்பாடு

[கொழும்பு]

வடக்கு-கிழக்கிலேயே அதிகளவு நெருக்கடிகளை அனுபவித்து மடு கல்வி வலயம் இயங்கி வருவதாக மேற்படி கல்வி வலயப் பணிப்பாளர் ஜே.ஜேக்கப் கவலைதெரிவித்துள்ளார்.

'ரணகோஷ' படைநடவடிக்கையினால் 8500 இற்கும் மேற்பட்ட பாடசாலைமாணவர்களுடைய கல்வி நிலை பாதிக்கப்பட்டுள்ளதுடன், பாடசாலைகளில் கல்வி உபகரணங்கள் மற்றும் கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளது.

மடு கல்வி வலய கல்விச் செயற்பாடுகளின் நிலைக்களனாய் விளங்கிய கல்விப் பணிமனை இராணுவ நடவடிக்கைகளின் போது அழிக்கப்பட்டுள்ளது.

இவற்றை மீள அமைப்பதற்கான நிதியுதவியில் கூட அரசு பாரபட்சம் காட்டி வருகின்றது.

மற்றும் ஆசிரிய பற்றாக்குறை நிலவுவது குறித்து சம்பந்தப்பட்டோர்க்கு பலமுறை முறைப்பாடு செய்தும் இதுவரையில் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

போர் சூழ் நிலை காரணமாக மனோநிலைபாதிப்புற்றிருக்கும் பாடசாலைப் பிள்ளைகள், அவர்களது கல்விச் செயற்பாடுகள் குறித்த அரசின் அசமந்தப் போக்கால் மேலும் மனநிலை பதிப்புற்று வருவது வேதனைக்குரியது" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [உ]


வடமராட்சி தென்புலோலியூர்
அருள்மிகு உபய கதிர்காம ஆலய
தான்தோன்றிய
ஸ்ரீ சக்கர சண்முக தேவஸ்தான

**புனராவர்த்தன பிரதிஷ்டா**
**மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

மங்களகரமான விக்கிரம வருஷம் உத்தராயணம் ஆனி மாதம் 16ம் நாள் (3-7-2000) திங்கட்கிழமை பூஷ நட்சத்திரமும் கூடிய முற்பகல் 10.05 முதல் 11 வரை வரும் சுபமுகூர்த்தத்தில் முருகப்பெருமானுக்கும் விநாயகர் முதலிய பரிவார தெய்வங்களுக்கும் கும்பாபிஷேகம் நடைபெறும்.

கர்மாரம்பம் ஞாயிற்றுக்கிழமை 18-ம் நாள் [2-7-2000] காலை 9 00 மணி தொடக்கம்.

சிவஸ்ரீ நா. யோகீஸ்வரக்குருக்கள் தலைமையில் பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ யோ. ரஞ்சிதக்குருக்கள் நடாத்தி வைப்பார்.

ஆலய குரு:- பிரம்மஸ்ரீ யோ. நாகேஸ்வரசர்மா

(1430)



**நாவற்குழி சிகிச்சை நிலையம்**

கோவிலாக்கண்டி, நாவற்குழியில் இயங்கிவந்த எமது சிகிச்சை நிலையம் தற்போது,

**சஞ்சீவி சிகிச்சை நிலையம்**

என்ற பெயருடன் தாவடி தெற்கு பாடசாலை வீதியில் (300 மீ, உள்ளே) இயங்கி வருகிறது என்பதை அறியத்தருகிறேன்.

(1307)

வைத்தியகலாநிதி
சி. சிவசுப்பிரமணியம்


# கல்லூரி அதிபர்கள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இவ்வருடம் க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேச வித்தியாலயத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்து வடமராட்சியில் வசிக்கும் மாணவர்கள் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி மகாவித்தியாலயத்தில் உப - அதிபர் த. சோதிலிங்கத்தையும் வலிகாமத்தில் வசிக்கும் மாணவர்கள் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இதே நேரம் மருதனார்மடம் வலயக் கல்வியலுவலகத்தில் அதிபர் சோ. ஸ்ரீகாந்தனையும் சந்தித்து விண்ணப்பங்களை அனுப்புவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. [சி]

★ ★ ★

யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலையில்கல்வி கற்று தற்போது வேறு பாடசாலைகளில் இணைந்திருக்கும் க.பொ.த. சாதாரணதர மாணவர்கள்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக 03 07 2000 காலை 10 மணியிலிருந்து மாலை 2 மணிவரை நவாலி முருகமூர்த்தி கோயிலில் சந்திக்குமாறு அதிபர் கேட்டுள்ளார். (ச)

★ ★ ★

யா/வசாவிளான் குட்டியப்புலம் அ.த.க பாடசாலையிலிருந்து க.பொ.த (சாதாரண) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களை எதிர்வரும் 3 ஆம் 5 ஆம் திகதிகளுக்கிடையில் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு அதிபர் எஸ். கந்தசாமி வேண்டுகோள்விடுத்துள்ளார்.

மேற்படி பாடசாலை கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்தில் தற்காலிகமாக மாலை நேரப் பாடசாலையாக இயங்கிவருவது தெரிந்ததே. (க)

★ ★ ★

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களில் வடமராட்சியில் வசிப்பவர்கள் நெல்லியடி ரலண்ட் ரியூட்டறியிலும் வலிகாமத்தில வசிப்பவர்கள் யா/இராமநாதன் கல்லூரி, மருதனார் மடத்திலும் எதிர்வரும் 4-ஆம் திகதி காலை 9 00 மணிக்கு தவறாது சமுகம் தந்து பெயர்களைப் பதிவு செய்யுமாறு மேற்படி கல்லூரி அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

# தொடரும் திருட்டுகள்

(புலோலி)

புலோலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்க நெல்லண்டை மக்கள் கடை இரவுவேளையில் ஓடு பிரிக்கப்பட்டு சுமார் 10,000 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் பருத்தித்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

அடிக்கடி இம்மக்கள் கடையில் விஷமிகள் தமது கைவரிசைகளைக் காட்டிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (சி-52)

# குருநாகலில் 163 பேர் கைது

(கொழும்பு)

குருநாகல் பகுதியை திடீரென சுற்றி வளைத்த பொலிசாரும், இராணுவத்தினரும் 163 பேரை கைது செய்துள்ளனர்.

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களும் பல குற்றச் செயல்களை புரிந்தவர்களும் குருநாகல் பகுதியில் நடமாடுவதாக கிடைத்த தகவல்களை அடுத்தே இத்தேடுதல் வேட்டை நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [வ]

# வட்டு. பகுதியில் தொடரும் திருட்டு ஒழித்துக்கட்ட முனைப்பான முயற்சி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டைப் பகுதி வர்த்தக நிலையங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த திருட்டுச் சம்பவங்களைத் தடுக்கும் வகையில், சம்பந்தப்பட்ட வர்த்தகர்களுக்கும் படைத்தரப்பினருக்குமிடையே ஆக்கபூர்வமான உடன்பாடொன்று ஏற்பட்டிருப்பதாய் தெரிய வருகிறது.

இதனடிப்படையில், திருட்டை முறியடிக்கும் வகையில் விழிப்புக்குழுக்களை அமைத்து இரவுக்கடமையில் வர்த்தகர்களும் ஈடுபடவிருப்பதுடன், படையினர் இந்நடவடிக்கைக்கு ஒத்தாசை புரியவுள்ளனர்.

இதேசமயம்,

மேற்படி திருட்டுச் சம்பவங்களைக் கண்டித்து வட்டுக்கோட்டைப் பகுதி வர்த்தகர்கள் கடந்த 23 ஆம் திகதி கடையடைப்புப் போராட்டத்தில்ஈடுபட்டதுடன், தமது நிலை தொடர்பான மகஜர் ஒன்றினை உடுவில் படைத்தள அதிகாரியிடம் கையளித்திருந்தமை தெரிந்ததே. [உ]

# யாழ்.கல்விவலயத்திருட்டு: சந்தேகநபர் தொடர்ந்து ரிமாண்டில்

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலயப் பணிமனையில் ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்தவேளை பெறுமதிவாய்ந்த பொருட்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மேற்படி பணிமனை ஊழியர் ஒருவரைத் தொடர்ந்து ஜூலை 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் மேலதிக நீதிவான்பி சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

இவரைபபிணையில் அனுமதிக்குமாறு இவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி விடுத்த கோரிக்கைக்குப் பொலிஸார்ஆட்சேபம் தெரிவித்தனர்.

அரசுடைமையைச் சூறையாடல், நாசம்செய்தல் முதலான குற்றச்சாட்டுகளுக்குப் பிணை அனுமதி மறுத்தல் பற்றிய தமது நிலைப்பாட்டைப் பொலிஸாரிடம் எடுத்துரைத்தனர்.

இதனையடுத்து நீதிபதி மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

இத்திருட்டுச் சம்பவம் பற்றிய யாழ் பொலிஸாரின் புலன்விசாரணைகள் தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டது. [சி-12]

# நெல்லியடியில் மா விநியோகம்

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ சங்கம கட்டுப்பாட்டுக்கு அமைவாக மா விநியோகத்தை மேற்கொண்டு வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. [சி]

# அழைப்புக் கட்டளை

இல. 16 பிரிவு 55 (1)

மல்லாகம்என்னுமிடத்திலுள்ள/மாவட்ட நீதிமன்றத்தில்

செல்லத்துரை சிவநாதன் பெண்
ஜெயராணி
கலைவாணி வீதி, வடலியடைப்பு.

வழக்கு இல. ம. நீ/45

எதிர்

வழக்காளி /கள்

செல்லத்துரை சிவநாதன்
சித்தன்கேணி
வட்டுக்கோட்டை வடக்கு,
வட்டுக்கோட்டை.

எதிராளி/கள்

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி/களுக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களை பெறுவதற்காக இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாரதலினால் இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின். 2000ஆம் ஆண்டு ஆடி மாதம் 07ஆந் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்:

பதிவுபெற்ற தாணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்

நீதிமன்றக் கட்டளைப்படி
அ. ஸ்ரீதேவி
Registrar
பதிவாளர் DISTRICT COURT

குறிப்பு; விளக்கத்தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறு பதிசெய்வஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80-ம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைவு

ச. இளங்கோவன்
சட்டத்தரணி

கையொப்பம் பதிவாளர்

2000 ஆண்டு தை மாதம் 11ஆந் நாளாகிய இன்று

(1435)

# வேரறுக்க உந்தன் அயில் வேண்டும்

அயில் கொண்டு அவுணரை அழித்த தேவா
மயில் ஊர்ந்து மேதினியை ஆளும் அழகே
வெயில் போன்ற வெம்பகையை வேரறுக்க உந்தன்
அயில் வேண்டும் ஆதரிக்க அடிபணிந்தோமையா

தூயில நாம் உன்னடியில் துணை வேண்டுமையா
பயிலுலகில் பாவங்கள் தீண்டாது நாளும்
அயிலனன கூர்மதியும் அழியா ஆக்கம்
கையிலே தரவேண்டும் காட்டுமலைக் கந்தவேளே

-உமா

(அச்சுவேலி நாவலம்பதிகாட்டு மலை கந்தசுவாமி கோயில் பூங்காவன உற்சவம் இன்றாகும்.)

# இலங்கைத் தமிழர்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்

## இந்திய சட்ட அமைச்சர் ராம் ஜெட்மலானி

(சென்னை)

இலங்கையில் சிறுபான்மை இன மக்களான தமிழ் மக்களின் மொழி மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் இந்தியா அதிக அக்கறையும் ஆவலும்கொண்டிருப்பதாக இந்திய மத்திய சட்ட அமைச்சர் ராம் ஜெட்மலானி கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நேற்று செய்தியாளர்கள் மத்தியிலேயே சட்ட அமைச்சர் ராம் ஜெட்மலானி இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் தமிழகத்தில் உள்ள சில கட்சிகளைத் தடை செய்யவேண்டும் என்ற கோரிக்கை பற்றி செய்தியாளர்கள் அமைச்சரிடம் கேட்டபோது அவ்வாறு கோர மக்களுக்கு ஜனநாயக உரிமை உண்டு என்று பதிலளித்தார். (வ)

# நகரத்தெருக்களில் வாலிபர்களின் கோஷ்டி மோதல்கள்; மக்கள் விசனம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகர்ப்பகுதியிலும் மற்றும் அதனை அண்டிய புறப்பகுதிக் கிராமங்கள் சிலவற்றிலும் வாலிபர்களால் அடிக்கடி மேற்கொள்ளப்படும் கோஷ்டி மோதல்கள் குறித்து அமைதி நாடும் பொதுமக்கள் பெரிதும் விசனமும், கண்டனமும் தெரிவிக்கின்றனர்.

சிறிதுகாலம் ஓய்ந்திருந்த இத்தகைய சம்பவங்கள் கூடுதலாக நகரப்பகுதியில் தலைதூக்கிப் பொது அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதாக உள்ளதெனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அநேகமாக நாகரிகமுடைதரித்த இளமட்டத்தினர் சைக்கிள்களில் கோஷ்டி கோஷ்டியாக வந்து சனநெரிசல்மிகுந்த பொது வீதிகளில் 'களத்தில்' இறங்கி மோதிக் கொள்கின்றனராம்.

இதற்கு காதல்விவகாரம், தனிப்பட்ட பகைமை, ஊர்ப் பிரச்சினை, வாய்த்தர்க்கம், முதலானவை காரணிகளாக இருக்கின்றன எனவும்கூறப்படுகிறது.

இத்தகைய மோதல்களைத் தடுத்துநிறுத்தி, சமாதானம் செய்துவைக்க முற்படும் பொது மக்களும்கூட இவர்களது மிரட்டலுக்கும், பலாத்காரத்துக்கும் உள்ளாகின்றனராம்.

மக்கள் இடப்பெயர்ந்தும் மற்றும் இன்னோரன்ன பல்வேறு வகைகளிலும் விவரிக்க இயலாத துன்பங்களுக்குள்ளாகிமனம் குமைந்து வாழ்ந்து வரும் இவ்வேளையில் இக்கட்டாக்காலிகள் புரியும் சமூக விரோத காலித்தனத்தை, காடைத்தனத்தைத் தடுத்து நிறுத்த எவ்வகையிலாவது சம்பந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது. (சி)

# அரச உயர்அதிகாரிகளின் தொலைபேசி பாவனை குறைப்பு

(கொழும்பு)

பிரதேச செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோரின் தொலைபேசிப் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள அமைச்சு கேட்டுள்ளது.

இவர்களின் அலுவலக தொலைபேசிக் கட்டணம் 2 ஆயிரத்து 500 ரூபாவிற்கும் வதிவிட தொலைபேசிக் கட்டணம் ஆயிரத்து 500 ரூபாவிற்கும் அதிகரிக்கக் கூடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை பிரதேச செயலாளர்களின் வாகனப் பாவனைக்கும் கட்டுபாடுகள் கொண்டுவரப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (க)

# செய்திப்பரல்

★ இலண்டனில் லாச் கிறிக்கெட்மைதானத்தில் 100 வது கிறிக்கெட் டெஸ்ட்பந்தயம் நடைபெற உள்ளது.

★ கஷ்மீர் பயங்கரவாதிகளுக்கு சாதனங்களையும், பொருள்களையும் வழங்கி வருவதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

★ அடுத்தமாதம் வானில் மூன்று கிரகணங்கள் நடைபெற உள்ளதாக வானிலையாளர்கள் அறிவிக்கின்றனர்.

★ செலுலர் தொலைபேசிகள் உடலுக்கு கேடுதருகின்றன என்பதற்கான மேலும் தகவல்கள் தேவைப்படுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

★ பிஜியில் இராணுவத் தலையீடற்ற அரசை அமைக்க இருப்பதாக இராணுவத் தளபதி கூறியுள்ளார். (து)

# விளையாட்டு விழா

(சுன்னாகம்)

சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையமும், யாழ். சர்வோதயமும் இணைந்து நடாத்தும், முன்பள்ளி விளையாட்டு விழாவும் மேலைத்தேய இசை அரங்கேற்றமும் இன்று 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஐயனார் கோவில் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இந்நிகழ்வு மேற்படி சனசமூகத் தலைவர் த. வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது (க-ர)

# உடையமைத்தல் கற்கைநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித சாள்ஸ் மத்திய மகாவித்தியாலயத்தில் உடையமைத்தல் பிரிவிற்கு தோற்றிய மாணவர்கள் யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நாளை 3 ஆம் திகதி பி. பகல் 1. 30 மணிக்கு சமுகம் தருமாறு அதிபர் திருமதி சின்னத்துரை தெரிவித்துள்ளார்.

புதிய மாணவர்களும் மேற்படி வகுப்பிற்குவிண்ணப்பிக்கலாம் என்றும் வகுப்புகள் ஒழுங்காகநடைபெற ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். [க]

# யுவதி கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர வீதிகளில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய யுவதி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிவான் நீதிமன்றில் கடந்த 28ஆம் திகதி ஆஜர்ப் படுத்தப்பட்டார்.

பிரஸ்தாப பெண்ணை அடுத்தமாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

லோகநாதன்மேரிதெரேசா என்பவரே அப் பெண்ணாவார்.

# உடுதுணி, உணவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் 67 குடும்பங்களுக்கு, ஊரெழு ஸ்ரீசத்யசாயி மண்டலியின் இளைஞர் பிரிவினர் உலர் உணவு மற்றும் உடுதுணிகளை வழங்கியுள்ளனர். (உ)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி மை. இராசநாயகம்

அவர்களின் அன்புத் தந்தையார்

திரு. அ. இலங்கை நாயகம்

30-6-2000 அன்று சிவபதமடைந்து விட்டார். எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ். பளையிலிட்டி வடக்கு கலை மகள்
ம. வி. காங்கேசந்துறை.

(1436)

# 45ம் நாள் கண்ணீர் அஞ்சலி

சுப்பிரமணியம் தெட்சணாமூர்த்தி

கைதடி கமநல சேவை நிலைய லிகிதர்

விவசாய நிலையமதில் விதை பொருட்கள்
பகிர்ந்தளித்தீர்
விவசாயப் பெரும்பரப்பை விளை நிலமாய்
ஆக்கி வைத்தீர்
குடும்பத்தில் தனிமரமாய் வந்துதித்து வாழ்ந்தீரே
குடும்பத்தின குலவிளக்கை தனிமரமாய் விட்டீரே
செல்வம் பெருகிவர 'ஷெல்' அதனால் இறந்தீரே
செயலக ஊழியர் நாம் இறைபதம் வேண்டுகிறோம்.

பெரும்பாக உத்தியோகத்தர்,
கமநல சேவை ஊழியர்கள்,
கமநல சேவைக் குழுக்கள்,
தென்மராட்சி.

(1437)

# கண்ணீர் அஞ்சலி

அமரர் தம்பிப்பிள்ளை எலிசபெத் இராசராசன்

(மீசை மாமா)

(K.K.S. வெல்டிங்கராஜ் உரிமையாளர்.)

மண்ணில் 1946 — விண்ணில் 02.06.2000



அன்புடன் மீசை மாமா என பாசத்துடன் அழைத்தோம்
சென்றுவிட்டீர் எம்மைமறந்து வெகுதூரம் அன்றோ
வென்று வந்தாய் அனைவரையும் உன் அன்பால்
சென்நீக்கிலார் கோவில் மூப்பரின் மகனென பெருமை பெற்றாய்
செல்லக்கண்டு, இரத்தினசோதி, அன்பு ஆகியோரின் சகோதரனே,
செல்லுமிடம் எதுவென்று கூறாமல் சென்று விட்டீர்
செல்வத்தில் மிதந்த சேனாதி, குமார், அன்னம்மாவின் அத்தானே
செல்லுமிடமெல்லாம் உன்திறமையை பறைசாற்றி நின்றாய்
குலக்கொழுந்து புஸ்பத்தை மனைவியாக அடைந்தவனே
மலடன் என அழைக்காமல் ஐவருக்கு தந்தையானாய்
இலகுவில் யாவருடனும் பழகும் ஆற்றல் பெற்றவனே
உலகவாழ்வுவெறுத்ததுவோ பரமனிடம் செல்வதற்கு
அன்புடன் மாமா என அழைத்து மகிழ்ந்தோம்
இன்முகம் காண்பது எப்போ எம் மாமாவே.
துன்பத்தை எம்வாழ்வில் காட்டிவிட்டாய் சின்ன மாமாவே,
பன்நாட்டிலும் இருந்தும் கதறுகிறோம் ஆசை மாமாவே.

நாவலர் வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம்.

இவர் பிரிவால் துயருறும்
அமரர் P. F. யோசப்.
குடும்பத்தினர், மருமக்கள்

(1434)

# 31-ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி வல்லிபுரநாதன் ருக்மணி



தோற்றம்: 26-01-1936

மறைவு: 03-06-2000

திதி; 02-07-2000 ஞாயிற்றுக்கிழமை

அன்பாய் பண்பாய் பழகிய ஆருயிர் அம்மாவே!
உங்கள் பிரிவால் எம் இல்லம் களை இழந்ததுவே!
உம்பால் வைத்த அன்பால் நாம் துடியாய்த் துடிக்கின்றோம்!
எமைவிட்டுப் பிரிந்து எங்கு தான் சென்றீர் தாயே!
உங்கள் ஆத்மா சிவன் தாளிணையடைந்து
இன்புற்றிருக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்
எம் அன்புத் தெய்வத்தின் மறைவு குறித்து எமதில்லத்திற்கு வந்து
ஆறுதல் கூறியோர்க்கும், மற்றும் பல வழிகளில்
உதவி புரிந்தோருக்கும் எமது மனமுவந்த
நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இல. 3, கந்தபுராண வீதி,
கந்தர்மடம்.

குடும்பத்தினர்

(1416)

சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்
தொருபால் கோடாமை சான்றோர்க்கணி
- குறள்

# வலம்புரி

## எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்

கவிஞர்கள் சிந்தனைச் சிற்பிகள் தீர்க்க தரிசிகளும் கூட. பாழ்பட்டு வறுமை மிஞ்சி விடு தலை தவறிக் கெட்ட பாரத தேசத்தை பாட்டுத்திறத்தால் உசுப்பிய பெருமை பாரதிக்குண்டு, அவன் வழி வந்த பாரதி தாசனாருக்கும் பொருந்தும். தமிழனின் வாழ்வும் வளமும் மங்காத தமிழென்று இறுமாந்து பாடினான்.

அதர்மத்தின் எல்லையில். நின்று கொண்டு ஆர்ப்பாட்டம் செய்த கௌரவரை தர்மத்தின் ஒளி கண்டு ஆர்ப்பரித்தெழுந்த பாண்டவர்க்காய் மதுசூதனன் வலம்புரிச் சங்கெடுத்து ஒலி செய்தான். அந்தஒலிநிறைவொலி நிம்மதி கொடுத்த பேரொலி.

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயேஎன்று இறைவனை நயந்து பெள்ளாய் மெய்ஞ்ஞானிகள் கண்டு புளகாங்கித்தனர். இருண்டு போன வாழ்வில் ஒளிவெள்ளம் கலந்துவிட்டால் மகிழ்ச்சி பொங்கும் உள்ளங்கள் துள்ளும்.

கைபேந்து ம் வாழ்வு கடுகித் தொலையட்டும். தம் பாரத்திலும் மரநிழலுமசையது கொண்டு பெய்பது பொத்தி, காலது கொண்டு மேலது தழுவி துவண்டு படுக்கும் வாழ்க்கை தொலைந்து போக வேண்டும்.

அனுமன் வால் போல நீண்டு போகும் இருண்ட வாழ்வு தொலைந்தால் மட்டுமே நிம்மதி பெருமூச்சு விடலாம். அன்றாடம் உழைத்து உண்பவர்கள் பணமுடையால் உடைந்து போயிருக்கிறார்கள்-முத்திரை ஊதியக்காரர் கூட இடப்பெயர்வால்மேலதிக செலவைச் சமாளிக்கமுடியாதுதத்தளிக்கிறார்கள்.

வாழ்வியலில் சுமை, கல்விப்புலத்தில் தடங்கல்கள் - அசௌகரியங்கள், பயப்பீதியுடன் வாழ்க்கை ஓட்டம், சுதந்திர இயக்கமின்மை இன்னோரன்ன தீராச்சுமைகள் தமிழனைத் தீயெனச் சுடுவது தாங்கமுடியாததே.

அழுகின்ற இதயங்கள் வளங்களுக்குமுன் நிம்மதியில்லையே அவாவி நிற்கின்றனர். அதன் அத்திவாரத்திலேயே தமிழன் வாழ்வு கட்டியெழுப்பப்படவேண்டும். அதன் பின் அவனது பல்வகை ஆற்றல் வளங்கள்பலவற்றைக் கொண்டு வரும்.

-அன்புடன் ஆசிரியர்

## சைவ பரிபாலன சபையினரின் இந்துசமய தேர்வு

[யாழ்ப்பாணம்]

யாழ்.சைவபரிபாலன சபையினரால் ஆண்டு-13 இந்து நாகரிகம்இந்துசமயத் தேர்வு ஜூலை 13ஆம் திகதியும் 14 ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பித்த பாடசாலைகளுக்குப் பிரவேச அட்டவணைகள் அனுப்பப்பட்டுள்ளன என்றும், தேர்வுக்கு விண்ணப்பித்து இடம் பெயர்ந்த பாடசாலைகளை 125, அரசடி வீதி. கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள தேர்வு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. [சி]

## கல்வளை - ஆலங்குளாய் வீதி திருத்தப்படாமல் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாயில் உள்ள கல்வளை - ஆலங்குளாய் வீதி கடந்த 20 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படவில்லை. சிறு திருத்தங்களுள்ள பலவீதிகள் பிரதேசசபைப் பகுதியில் திருத்தப்படும்போது 2 கி. மீ. நீளமான இவ்வீதி திருத்தப்படாதுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு அருகாமையிலிருந்து மாசியப்பிட்டி சந்தையை அண்மித்த பகுதியில் இவ்வீதி முடிவடைகிறது. எனவே சம்பந்தப்பட்டவர்கள் வீதியை திருத்தியும் பஸ்சேவையை ஆரம்பிக்கவும் முயற்சிக்க வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. (சி)

## வல்லிபுரம் பகுதியில் இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணம் வழங்கப்பட்டது

(புலோலி)

தென்மராட்சிப்பகுதியில் இடம்பெற்ற வலிசெயல்களையடுத்து இடம்பெயர்ந்து வல்லிபுரம் பகுதியில் தஞ்சமடைந்த 77 குடும்பங்களைச் சேர்ந்த 310 பேருக்கும் வல்லிபுரம் கிராமமக்கள் கிராம சேவை அலுவலர் எஸ். குமரகுருவின் அனுசரணையுடன் நிவாரண உதவிகளைத் தொடர்ந்து வழங்கிவருகின்றனர்.

முதல்வாரம் குடும்பமொன்றுக்கு 3 கிலோ அரிசி, 4 தேங்காய், காசு 100 ரூபா என்பன வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் 3கிலோ அரிசி 5 தேங்காய். கோதுமைமா என்பன வழங்கப்பட்டு வருகின்றன. [க-52]

## எந்தெந்த பகுதிகளுக்கு கூடுதல் பஸ் சேவை தேவை என்ற விபரம் அவசியம்

### பொது முகாமையாளர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

''எந்தெந்த இடங்களில் கூடுதல் பஸ் சேவைகள் தேவைப்படுகின்றது எந்தெந்த'' பகுதிகளில் பஸ் சேவைகளில் மாற்றம் தேவை என்பன பற்றிய விபரங்களில் பொதுமக்கள் எமது கவனத்திற்குக் கொண்டுவந்தால் அத்தேவைகளை உடனடியாக நிறைவேற்றிவைப்பதற்கு எமது சபை தயாராக இருக்கிறது ''என்று வட பிராந்திய போக்குவரத்துச் சபைப் பொதுமுகாமையாளர் வி. எஸ் சொக்கலிங்கம் தெரிவித்தார்.

''தற்போதைய நெருக்கடி நிலை மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் வசதி என்பனவற்றை மிக ஆழமாகக் கருத்திற் கொண்டே எமது சேவை அமைகிறது 'என்றார் அவர்.

குடாநாட்டில் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், மற்றும் அனைத்துத் தரப்பினரதும் நலன் பேணும் வகையில எமது சபை தனது சேவைகளை நாளாந்தம் மிகச் சிறப்பான விதத்தில் நடத்தி வருகின்றது.

### ஒத்துழைப்பு

இத்தேவைகளைச் சேவை மேலும் விரிவானதாக விஸ்தரிக்கப்பட வேண்டுமாயின் அதற்குப் பொதுமக்களின் தூய்மையான ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

வெறுமனே பஸ் சேவை போதுமானதாக இல்லை என்று மட்டும் ஒரு சாரார் பொறுப்பற்றவிதத்திலோ பிரலாபிப்பது யதார்த்த பூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல என்பதனைச் சிந்திக்கும் திறன் படைத்தோர் புரிந்து கொள்வர்.

### பெருமிதம்

எந்தெந்த பாதைகளுக்குக் கூடுதல பஸ் சேவை தேவை, எந்தெந்த பாதைகளில் பஸ் சேவை நேரங்களில் மாற்றம் தேவை என்பன பற்றிய விபரங்கள் தெளிவாக எம்மிடம் தெரிவிக்கப்படுமிடத்து அக்குறைபாடுகளை உடனடியாகத் தீர்த்து வைக்க நாம் தயாராக இருக்கின்றோம். எமது உத்தியோகத்தர்கள். ஊழியர்கள் எனது திட்டம் செம்மையுற செயற்பட முழு ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர் இதுபெருமிதம்தருகிறது.

### கூடுதல் எண்ணிக்கை

இவ்வேளை இடம் பெயர்ந்த மக்களோ அல்லது நிரந்தர வசிப்பிடங்களைக் கொண்ட மக்களோ கூடுதலான தொகையினராக உள்ள பகுதிக்கு பஸ் சேவை விஸ்தரிக்கப்படுதலே விரும்பத்தக்கது. காலை, மாலை வேளைகளில் கூடுதலான பயணிகள் பயணம் செய்யும் பஸ்களில் பகல் வேளைகளில் ஒரு சில பயணிகளே பயணம் செய்யும் நிலையும் சில வேளையில் உள்ளது. இந்நிலையானது எமது சபைக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடியது எனினும் இத்தகைய இடர்களையும் தாங்கிக் கொண்டு எந்தச் சேவையையும் குறைக்காமல் நாம் தொடர்ந்து நடத்தி வருகின்றோம்.

எனவே பொது மக்கள் நலன் கருதி எமது சேவை மேன்மேலும் சிறப்புற பயணிகள் ஆக்கபூர்வமான கோரிக்கைகளை எமது கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென வினயமுடன் கேட்டுக் கொள்கின்றேன் ''என்று திரு சொக்கலிங்கம் தெரிவித்தார். (ஸ்ரீ)

## மக்களின் கஷ்டத்தை நீக்குவதற்கு அரசு துரித நடவடிக்கை

### ஜனாதிபதி விசேட பணிப்புரை

(கொழும்பு)

தற்போதைய நிலையில் பொருளாதார அழுத்தங்களுக்கு உட்படும் பொதுமக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்க அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில அமைச்சரவை சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி அரசாங்க ஊழியர்களில் 80 சதவீதமானோர் இக்கொடுப்பனவைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

6 ஆயிரம் ரூபாவுக்குக் குறைவான ஓய்வூதியம் பெறுவோருக்கு மேலதிகமாக 300 ரூபா வழங்கப்படவுள்ளது. அத்துடன் சமுர்த்திக் கொடுப்பனவுகளும் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 250 ரூபா கொடுப்பனவு பெற்று வந்தவர்களுக்கு 500 ரூபாவாகவும், 500ரூபா கொடுப்பனவு பெற்று வந்தவர்களுக்கு 750 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது இவ்வதிகரிப்புக்கள்யாவும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உரத்திற்கு வழங்கும் மானிய தொகை 50 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன், நெல்கொள்வனவு செய்வதற்கென வழங்கப்பட்ட கடன் தொகையின் வட்டி, 2 வீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது.

இத்தவேளையில்பட்டதாரி பயிலுநர் திட்டத்திற்கமைய பல்வேறு நிறுவனங்களிலும் பணிபுரியும் 10 ஆயிரத்து 850 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-உ)

## ஒன்றுக்கு மேற்பட்ட மொழித்திறனுள்ள அரச ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு

வடக்குக்கிழக்கு மாகாண சேவையின்கீழ் பணியாற்றும் அலுவலரின் ஒன்றுக்கு மேற்பட்ட மொழித்திறனுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதற்கான சுற்றுநிருபம் ஒன்று மாகாண பொதுநிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு அமைச்சினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும், பிரதேச செயலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிக்கான ஆங்கில மொழிப் புலமைக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்படவுள்ளது. இக்கொடுப்பனவுகள் தொடர்பாக ஆங்கில மொழித்திறனைப் பரீட்சிக்கும் மூவர் கொண்ட குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரின் வாய் மொழித் தேர்ச்சிபற்றி பரீட்சிப்பர். (வ-120)

## கணனி பயிற்சி வகுப்புகள்

என் சி.சி ஏ பரீட்சைக்கான கணனி பயிற்சிவகுப்புகள் எதிர்வரும் 3ஆம் திகதி காலை 11.00மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில ஆரம்பமாகி நடைபெறும் என மேற்படி கல்லூரி அதிபர் தெரிவித்துள்ளார்.

இது விடயம் சம்பந்தமான பதிவுகள் அன்று காலை 9 00 மணிக்கு இடம் பெறும் என்றும் உள்வாரியாக தோற்றுவோர் கட்டாயமாகவும்வெளிவாரியாகத்தோற்றுவோர் விரும்பினால் கலந்து கொள்ளலாம் என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (க)

## மாணவர்கள் கவனத்திற்கு

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலைகள், வலிகாமத்தில் பின்வரும் பாடசாலைகளில் தனித்துவமாக இயங்க ஆரம்பித்துள்ளதால், மாணவர்களைத் தத்தமக்கு வசதியான பாடசாலைகளில் இணைந்து கல்வியைத் தொடருமாறு தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

நிரு கல்வி வலயம், வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயம், அராலி சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவற்றில் காலை நேரபாடசாலையாகவும், இணுவில் மத்திய கல்லூரி வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக்கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, சுதுமலை சின்மயா பாரதி வித்தியாலயம் என்பவற்றில் மாலை நேரப் பாடசாலையாகவும் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## செஞ்சிலுவை வேண்டுகோள்

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுளவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். சுபாரத்தினம்முத்துக்குமாரு திருப்பதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி, பிரான்சிஸ் அகஸ்தின் எரகம், செம்பியன்பற்று. பளை, மெய்யசாமி சின்னையா கச்சாய்வீதி, சாவகச்சேரி, பொன்னுத்துரைபுஷ்பசவுந்தரி, மயிலணி வடக்கு, சுன்னாகம், சாம்பசிவம் பத்மலதா பத்மபதி மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (க)

## இவரைக் கண்டீர்களா?

அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும், இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொண்ட

**வினாசித்தம்பி கணேசபிள்ளை (துரை)**

1-ம் திகதி சனிக்கிழமை காலையிலிருந்து சுதுமலையிலுள்ள தமது தற்காலிக வசிப்பிடத்திலிருந்து காணாமல் போய்விட்டார்.

வயது 78, சிவந்த நிறம், உயரம் குறைந்த மெல்லிய உடல் ஒட்ட வெட்டிய நரைத்த தலைமயிர், ஞாபக சக்தி மிகவும் குறைந்தவர், தமது முகவரியும் விபரங்களையும் கூற முடியாதிருப்பவர், கடைசியாக நீலச் சாரமும் வெள்ளை ரீசேட்டும் அணிந்திருந்தார்.

இவரைக் கண்டவர்கள் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம். சன்மானம் வழங்கப்படும்.

திருமதி கணேசபிள்ளை
மே பா திருமதி பு. ஜெயாத்துரை
ஆலடி அண்ணாமலை வீதி, சுதுமலை. (1448)

மக்களின்......

குறித்து ஆராயப்பட்டது:

இக்கூட்டத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்கள், தலைவர்கள, பிரதேச செயலர்கள் பெற்றோலியக்கூட்டுத்தாபன அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்த தென்மராட்சி மேற்கு (கைதடி) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இணுவிலில் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நவாலி றோட் ஆனைக்கோட்டையிலும், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நெல்லியடியில் தங்கள் தலைமைக் காரியாலயத்தை அமைத்து இயங்கி வருகின்றன.

இச்சங்கங்கள் தங்களுடைய மக்கள் வாழும் இடங்களில் விற்பனை நிலையங்களைத் திறந்து நிவாரணங்களை வழங்க ஏற்பாடு செய்கின்றன. (வ)

இவ்வாறு......

எனப் பதிவு செய்துள்ள பயணிகள் மட்டும் இன்று காலை 10 மணிக்கு பயணச் சீட்டுப் பெறுவதற்கு வருமாறு யாழ். சிவில் நிர்வாக காரியாலயம் அறிவித்துள்ளது.

பயணச் சீட்டுப்பெறும் பயணிகள் நாளை காலை பயண ஆயத்தங்களுடனும் மதிய உணவுடனும் யாழ். புகையிரத நிலையத்திற்கு வருகை தருமாறும் சிவில் நிர்வாகக் காரியாலயம் கேட்டுள்ளது.

# உத்தேச அரசியல் திட்டத்தை புலிகள் நிராகரித்தமை எதிர்பார்க்கப்பட்டதே!

(கொழும்பு)

அரசாங்கத்தினால முன் வைக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்புத் திட்டத்தை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளமையானது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே என்றும் இதில் அதிசயப்பட ஒன்றும இல்லை என்றும் தமிழ்க் கட்சிகள் தெரிவித்துள்ளன.

அரசியலமைப்புத் திட்டத்தை விடுதலைப் புலிகள் நிராகரிப்பதாக புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ் ஆகிய தமிழ் கட்சிகள் இவ்வாறு தெரிவித்துள்ளன.

## 45ம் நாள் நினைவஞ்சலி

யாழ் / கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலை ஆசிரியைகளான

திருமதி த. சந்திரமதியின் அன்புக் கணவர்

**தட்சணாமூர்த்தி**

செல்வி மா. பாலரஞ்சினியின் அன்புத் தந்தையார்

**மாணிக்கவாசகர்**

ஆகியோரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா / கைதடி நாவற்குழி
அ. த. க. பாடசாலை.

(1451)

முதல்வர்......

தமிழ் அரசியல்கட்சித்தலைவர்களும், அரசுகளும் கையெப்பமிட்ட ஒப்பந்தங்களை இலங்கை அரசு ஒருபோதும் மதிக்கவில்லை என்றும்,

ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ள அதிகாரப்பகிர்வு யோசனைகளும் தெளிவாக இல்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

மணலாற்று...

(இருபைராஜா சுஜாத்தா)
மட்டக்களப்பு
★ சந்திரா
(கதிரமலை தியாகராணி)
மட்டக்களப்பு
★ வர்ணப்பிரியா
கணபதிப்பிள்ளை சுஜாத்தா
மட்டக்களப்பு
★ சிந்துஜா
(அற்புதராஜா சாரதாதேவி)
மட்டக்களப்பு
★ நிர்மாலினி
(கருப்பையா குகனேஸ்வரி)
மட்டக்களப்பு

★ ஈமணிசரன்
(விநாயகமூர்த்தி செந்தூரநாதன்)
மட்டக்களப்பு
★ உதயதரன்
(பொன்னுத்துரை கந்தப்போடி]
மட்டக்களப்பு
★ மதுரபரன்
(பொன்னையா சித்திரவேல்)
மட்டக்களப்பு
★ உயிர்பணி
(கணபதிப்பிள்ளை தங்கேஸ்வரன்)
மட்டக்களப்பு
★ சீராளசிங்கம்
[தங்கராசா அருமைநாயகம்]
மட்டக்களப்பு
எல்லைப்படையினரான
★ புவனராஜா/சுபோ
(நடனசபேசன் புனராஜா)
புதுக்குடியிருப்பு (ந-7)

மணலாறு......

திரும்பி விட்டதாகவும் இம்மோதலில் 15 விடுதலைப்புலி உறுப்பினர்களும், எல்லைப் படைவீரர் ஒருவரும் உயிரிழந்ததாகவும் விடுதலைப்புலிகள தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

விமானத்தை

உடனடியாகவிடுதலைசெய்யுமாறு நேற்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 3ம் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விமானத்தைக் கடத்த முயன்றதாகக்கூறி இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## மரண அறிவித்தல்கள்

### அமரர் சின்னையா நடராஜா

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த திரு. சின்னையா நடராஜா 30.06.2000 அன்று காலமானார். அன்னார் காலஞ் சென்ற சின்னையா பொன்னு தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ் சென்ற சின்னப்பு அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் ஆவார். ஜேர்மனியில் வசிக்கும் நவரத்தினத்தின் அன்புக் கணவரும், ஜேர்மனியில் வசிக்கும் பாலசரஸ்வதி, கணேசகுமார், செந்திலகுமார், சிவகுமார், சதீஸ்குமார், மகாலக்ஷ்மி ஆகியோரின் அன்புத்தந்தையும், செல்வம், இராசம்மா, கெங்காமலர்தேவி (அதிபர், யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்) சண்முகராஜா (இ போ.ச கோண்டாவில்) நவரத்தினராஜா (இளைப்பாறிய உத்தியோகத்தர், புகையிரதப் பகுதி), ஆகியோரது சகோதரனும், காலஞ்சென்ற கதிரவேலு, சொர்ணரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர் மகாஜனாக் கல்லூரி), விஜயலக்ஷ்மி, தங்கரத்தினம், இராசமணி, சீதா, திருச்செல்வி, கதிர்கமநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவரது ஈமைக்கிரியைகள் 01.07.20 0 (சனிக்கிழமை) அவரது சகோதரரது இல்லத்தில் நடைபெற்றது இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பிரதேச செயலக ஒழுங்கை,
கன்னாகம்.

தகவல்
சி. நவரத்தினராஜா
(சகோதரன்)

(1445)

### செல்வி சந்தியோகுப்பிள்ளை விக்ரோறியா

செல்வி சந்தியோகுப்பிள்ளை விக்ரோறியா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்றவர்களான சந்தியோகுப்பிள்ளை தம்பதிகளின் இளைய புதல்வியும், காலஞ்சென்றவர்களான திருமதி றோசம்மா நாகேந்திரம், திரு. இராஜதுரை சொலமன் ஆகியோரின் அன்புத் தங்கையும், திருமதி இராணி இம்மானுவேல் (லண்டன்), திருமதி பேபி இம்மானுவேல (லண்டன்), காலஞ்சென்ற திரு. விக்ரர் நாகேந்திரா (லண்டன்) ஆகியோரின் சிறியதாயாரும், திருமதி ஜொய்சி அருமைநாயகம், திருமதி தேவி மரியதாஸ், காலஞ்சென்ற திருமதி அனஸ்ரேசியா (குவி பிரான்ஸ்), திரு. றெனி சொலமன் (உரிமையாளர் றெனி ஒப்ரிக்கல்ஸ்), Dr றெஜி சொலமன் (லாவண்யா பல். மூக்குக் கண்ணாடி உரிமையாளர்), திருமதி ஜெ நது வேதாசலம், திருமதி சாந்தி குகதாஸ் ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் நலலடக்கம் இன்று (02-07 2000) பி. ப. 3-00 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்!
Dr. Regi Solomon

176/9, பிரதான வீதி,
Press Lane.
Jaffna.

(1450)

அதிகாரப்..

மக்களுக்குரியதே ஒழிய புலிகளுக்கல்ல புலிகள் தீர்வு யோசனையை ஏற்றால் என்ன ஏற்காவிட்டால் என்ன அரசு தனது தீர்வு முயற்சியைக் கை விடாது என்று கூறினார்.

இதேவேளை மீன் பிடி நீரியல் வள அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ தீர்வு யோசனை விடயத்தில் புலிகளை சம்மதமின்றி சட்டமாக்குவதில் எவ்வித பிரயோசனமும் இல்லை என்று கூறியுள்ளார். (வ)

சமாதானம்..

வகிக்காமையே காரணமாகும் என நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெம் தெரிவித்துள்ளார்:

இலங்கைத் தலைவர்களுடன் தாம் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் விபரம் குறித்து இந்திய தலைநகர் புதுடில்லியில் வைத்து 'டைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகைக்கு அண்மையில் வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார். (க-2)

அரசு.

தாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சுக்களில் பிராந்தியங்களுக்கு அதிகாரம் வழங்குதல் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

ஆயினும் பெருமளவான ஏனைய விடயங்களில் இணக்கப்பாடு ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது.

ஐக்கிய தேசியக்கட்சி சொண்டுவந்த யோசனைகளான நீதிச்சேவை ஆணைக்குழு. சுயாதீன பொதுச்சேவை ஆணைக்குழு ஆகியன அமைத்தல் தொடர்பாகவும் சுயாதீன பொலிஸ் சேவை ஆணைக்குழு அமைத்தல் குறித்தும் குறிப்பிடத்தக்களவு இணக்கம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச்சந்திப்பு இறுதியானது எனக் கூறப்பட்டிருந்த போதும் மீண்டும் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை சந்திப்பதென இரு தரப்பும் முடிவு செய்திருக்கிறது. (ச-வ)


## ஷண்ணின் இன்றைய வெளியீடு

சூப்பர்ஸ்ரார் ரஜனிகாந், அமீர்கான் நடிப்பில்

**ஆண்டவன்**

(திரை [illegible] வகுகளிற்கு முழு உரிமை)

JACKIECHAN CWENWILSON

நடிப்பில்

SHANGHAI NOON

புத்தம் புதிய பாடல்கள் அழகிய வர்ணக் கவருடன் விற்பனையில் உள்ளன நீங்கள் விரும்பும் பாடல்களும் பதிவு செய்து உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**ஷண் றெக்கோடிங் ஸ்பொட்**

24/2, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(1449)


## மரண அறிவித்தல்கள்

### தர்மலிங்கம் (பத்தர்) இராசமுத்து

தர்மலிங்கம் (பத்தர்) இராசமுத்து 01 07.2000 சனிக்கிழமை காலை சிவபதம் அடைந்தார

அன்னார் காலம் சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் தவமணிதேவி சண்முகநாதன் (பத்தர்) வேலாயுதம் (பத்தர்) நீர்கொழும்பு காலம் சென்ற பரமேஸ்வரி கணேசன் காலம் சென்ற பண்டாரம், தங்கராசா நீர்கொழும்பு சந்தனராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரது இல்லத்தில் 02-07.2000 ஞாயிறு காலை நடைபெற்று காலை 10 00 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

பூநாறி மாத்தடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்
த. சண்முகநாதன் (பத்தர்)
மகன்

(1442)

### நாகலிங்கம் செல்வநாயகம்
(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட நா. செல்வநாயகம் 01-07-2000நேற்றுகாலமாகிவிட்டார். இவர் புனிதவதியின் அன்புக் கணவரும், மதிவதனி (சுவிஸ்), சந்சொருபன் (கனடா), நந்தினி (இத்தாலி) ஆகியோரின் அருமைத் தந்தையும், சிவசக்தி, வடிவேல், சிறீதரன், சுஜாதாவின் மாமனாரும் பிரசன்னா, கோகுல், பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02-07-2000 இன்றுபகல் 11.00 மணிக்கு நடைபெற்று உரும்பிராய் இளங்காடு மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும்.

அரச வீதி,
உரும்பிராய் கிழக்கு

செ. புனிதவதி
மனைவி.

[1447]

இப் பத்திரிகை "வலம்புரி" [illegible] யாழ்ப்பாணம், [illegible] 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.